

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் அனைத்து பள்ளிகளிலும் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து நாகப்பட்டினம் மாவட்டம், நேற்று (25.08.2023) திருக்குவளையில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சென்னையில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கு காலை உணவினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் அனைத்து பள்ளிகளிலும் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் நேற்று (25.08.2023) தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சென்னையில் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கு காலை உணவினை வழங்கி, மாணவர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை, மயூரநாதர் சுவாமி திருக்கோவில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவை முன்னிட்டு, நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளை நேற்று முன்தினம் (24.08.2023) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் ஆய்வு செய்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# இந்தியாவுக்கு வீரநாடு என்ற பட்டத்தை பெற்றுக் கொடுத்துள்ளார் வீரமுத்துவேல்!

## தந்தை பழனிவேல் பெருமிதம்!

*விழுப்புரம், ஆக,25*

சந்திரயான் 3 திட்ட இயக்குனர் ச.வீரமுத்துவின் தந்தை பழனி வேலு விழுப்புரத்தில் நேற்று நிருபர்களிடம் கூறுகையில், தமிழக மக்கள் மட்டுமின்றி, இந்திய மக்களும் மறக்க முடியாத நாள். என்னுடைய மகனிடம் இந்த திட்டத்தை கொடுத்ததிலிருந்து, ஏற்றுக் கொண்டதிலிருந்து சந்திரயான் 3 வெற்றி பெற வேண்டும் என்று பல மாதங்கள் முயற்சி எடுத் துள்ளார். அவரது முயற்சி வீண் போக வில்லை.

எனது மகனின் பெயருக்கு ஏற்றார்போல் வீர முத்துவேல் வீரனாக இருந்து வெற்றி பெற்றிருக்கிறார். இந் தியாவை வீர நாடு என்ற பட்டத்தை பெற்றுகொடுத்துள்ளார். இன்று இந்திய மக்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். இந்தியா பெருமைக்குரிய நாடாக, சிறந்த நாடாக திகழ்ந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக ரஷ்யா விண்கலத்தை நமக்கு போட்டியாக விட்டு தோல்வி அடைந்தது. இந்தியா வெற்றி பெற்றதன் மூலம் மிகப்பெரிய வல்லரசு



நாடாக திகழக்கூடிய அளவிற்கு பெருமைக்குரிய நாடாக வந்திருக்கின்றது. குறிப்பாக பிரதமர் சந்தோஷமாக இருக்கிறார்.சந்திராயன் திட்டம் பொறுப்பேற்றதிலிருந்து வீரமுத்துவேல் குடும்பத்தில் யாரிடமும் சரியாக பேசுவது கிடையாது. கடந்த 21ம் தேதி உடன்பிறந்த சகோதரி திருமணத்திற்கு கூட வரவில்லை. குடும்ப நிகழ்ச்சிக்கும் வந்தது கிடையாது. நானும் அவரது வேலைதான் முக்கியத்துவம் அதில் கவனம் செலுத்துமாறு கூறினேன். திருமணத்திற்கு வருவதை விட இன்று(நேற்று) அதிக சந்தோஷம் கிடைத்துள்ளது' என்றார்.

# சிறுபான்மையினர் நலத் துறை செயல்படுத்தும் திட்டங்கள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு!

*சென்னை, ஆக. 26 -*

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறைஅமைச்சர் செஞ்சி கே எஸ். மஸ்தான் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலம் செயல் படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்தான அனைத்து மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

துறையின் திட்ட செயல்பாடு, இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் கல்லூரி / பள்ளி விடுதிகளின் நிர்வாகம், அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஒன்பதாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி / ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் இஸ்லாமியர், கிறித்தவர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் மதங்களை சார்ந்த சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கு ஒன்றிய அரசின் (100... நிதி பங்களிப்புடன்) கூடிய கல்வி உதவித் தொகை திட்டங்கள்,

முஸ்லிம் கிறித்தவ மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் நிதியுதவி வழங்கும் திட்டம், விலையில்லா மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம் வழங்குதல், உலமாக்கள் மற்றும் பணியாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு மிதிவண்டி வழங்குதல், உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு நிதி உதவிகள், பதிவு பெற்ற வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம்,

கிறித்துவ தேவாலயங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிக்காக நிதியுதவி வழங்கும் திட்டம், கபரஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைக்க நிலம் கையகப்படுத்தும் திட்டம், கபரஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்களுக்கு புதிய சுற்றுச்சுவர் ( ம ) பாதை புனரமைத்தல் திட்டம், பாரத பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம், பிரதம மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் முன்னேற்ற விவரம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்பட்டு வரும் பல்வேறு கடன் உதவி திட்டங்கள் குறித்து அனைத்து மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவர்களிடம் கலந்தாலோசித்தார்.

# தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்த நாள்!



ஆகஸ்டு 26!
தமிழுக்கு தொண்டு செய்த
"தமிழ்த் தென்றல்"
திரு.வி.க. அவர்களின்
141 ஆவது பிறந்த நாள் -
நின் புகழ் வாழ்க !






இந்தியாவிலேயே முதல்முறையாக பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தினை கழகத்தலைவர்,தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு முழுவதும் தொடங்கி வைத்ததையடுத்து தருமபுரி மாவட்டம் நகராட்சி பள்ளியில் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி தலைமையில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம்.பெ.சுப்ரமணி,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டி.என்.வி.எஸ். செந்தில்குமார்,சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன்,நகராட்சி துணை தலைவர் நித்யா அன்பழகன்,மாவட்ட பொருளாளர் வே.தங்கமணி,ஆகியோர் முன்னிலையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. உடன் அரசு அதிகாரிகள்,கழக நிர்வாகிகள் இருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் அனைத்து பள்ளிகளிலும் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்து நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் நேற்று (25.08.2023) தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கோடம்பாக்கம் மண்டலம், மாந்தோப்பு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாணவர்களுக்கு காலை உணவினை வழங்கி, மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். இந்நிகழ்ச்சியில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு. மகேஷ்குமார், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், துணை ஆணையர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில் காலை உணவு திட்டத்தை காலை 8.00மணி அளவில் துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் ஊராட்சி ஒன்றியம் சூலா மலை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு ஆகியோர் காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ் , மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன், ஒன்றிய செயலாளர் அறிஞர், தலைமை செயற்குழு உறுப்பினர் கிருபாகரன் ,பொதுக்குழு உறுப்பினர் நாகராசன் , அஸ்லாம் , இலக்கிய அணி அமைப்பாளர் பாலாஜி , அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் மாணிக்கம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் லட்சுமி பிரியா, மற்றும் அரசு அலுவலர்கள் , பள்ளி மாணவ மாணவிகள் ,பெற்றோர்கள் ,உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். அதன்படி, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், முத்துக்காளிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மாணவ, மாணவிகளுடன் காலை உணவு அருந்தினார். இந்நிகழ்வில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, ராசிபுரம் ஒன்றிய கழக செயலாளர் கே.பி.ஜெகநாதன் உட்பட பலர் உள்ளனர்